Cambridge Assessment International Education

Cambridge International A Level

TAMIL **9689/42**

Paper 4 Texts **May/June 2025**

2 hours 30 minutes

You must answer on the enclosed answer booklet.

You will need: Answer booklet (enclosed)

INSTRUCTIONS
- Answer **three** questions in total in **Tamil**, each on a different text:
  - Answer **at least one question** from Section 1.
  - Answer **at least one question** from Section 2.
  - Answer **one other question** from **either** Section 1 **or** Section 2.
- Follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper, ask the invigilator for a continuation booklet.
- Dictionaries are **not** allowed.
- You may **not** take set texts into the examination.

INFORMATION
- The total mark for this paper is 75.
- Each question is worth 25 marks.

கட்டளைகள்
- மொத்தம் மூன்று கேள்விகளுக்கு, வெவ்வேறு பாடப் பகுதிகளிலிருந்து, எடுத்து, **தமிழில்** விடை எழுதவும்:
  - முதல் பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - இரண்டாவது பகுதியிலிருந்து **குறைந்தது ஒரு கேள்விக்கு** விடை எழுதவும்.
  - முதல் **அல்லது** இரண்டாவது பகுதியிலிருந்து **மற்றொரு கேள்விக்கு** விடை எழுதவும்.
- விடை எழுதுவதற்கான புத்தகத்தின் முதல் பக்கத்திலுள்ள கட்டளைகளைப் பின்பற்றவும். கூடுதல் விடைத் தாள்கள் தேவைப்பட்டால், தேர்வு அதிகாரியிடம், தொடர்ச்சிக்கான புத்தகத்தைக் கேட்கவும்.
- அகராதிகள் **அனுமதிக்கப்படமாட்டாது**.
- தேர்வு அறைக்குள் எந்தப் பாடப் புத்தகத்தையும் எடுத்துச் **செல்லக்கூடாது**.

தகவல்
- இந்தக் கேள்வித்தாளுக்கான மொத்த மதிப்பெண்கள் 75.
- ஒவ்வொரு கேள்விக்கும் 25 மதிப்பெண்கள்.

This document has **12** pages. Any blank pages are indicated.

NL 342292/2
© UCLES 2025

விடைத்தாள் புத்தகத்தைப் பயன்படுத்துவதற்கான கட்டளைகள்

கருப்பு அல்லது கரு நீலப் பேனாவைப் பயன்படுத்தவும்.

வரைபடங்களுக்கோ, கிராப் வரையவோ நீங்கள் எச்.பி.பென்சிலைப் பயன்படுத்தலாம்.

உங்களுடைய பெயர், சென்டர் எண், உங்கள் எண் ஆகியவற்றை, இந்தப்பக்கத்தின் மேலேயுள்ள, அதற்கான இடத்தில் எழுதவும். தெளிவாக, பெரிய எழுத்துக்களில் எழுதவும்.

எழுத்துக்களை அழிப்பதற்கான பேனாவையோ, திரவத்தையோ **பயன்படுத்தக்கூடாது**.

எந்த பார்க்கோடிலும் **எழுதக்கூடாது**.

கொடுக்கப்பட்ட விடைத்தாள் புத்தகத்தில் எழுதவும். தாளின் இரு பக்கங்களிலும் எழுத வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் விடை எழுதிய பின்னர் இரண்டு வரி இடைவெளி விடவும்.

நீங்கள் விடை எழுதும் கேள்வியின் எண்ணை முதல் மார்ஜினில் எழுதவும்.



நீங்கள் விடை எழுதும் கேள்வியில் துணைக் கேள்விகள் இருந்தால் (எடுத்துக்காட்டு 1.a) துணைக் கேள்வி எண்ணை இரண்டாவது மார்ஜினில் எழுதுங்கள்.

நீங்கள் விடைத்தாள் புத்தகத்தில், விடை எழுதுவதற்கான குறிப்புகளையும் பேனாவால் எழுதிப் பழகலாம் ஆனால் மதிப்பெண் **போடவேண்டாத** அத்தகைய குறிப்புகளை அடித்து விடுங்கள். படிக்கமுடியாமல் அடிக்கத் தேவை இல்லை.

விடைத்தாள் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் **கிழித்துவிடாதீர்கள்**.

நீங்கள் எழுதிய எல்லா தாள்களையும் கொடுத்து விடுங்கள் தொடர்ச்சிக்காக விடைத்தாள். புத்தகங்கள் வாங்கியிருந்தால் அவற்றையும் விடைத் தாள் புத்தகத்தில் இணைத்து விடுங்கள்.

© UCLES 2025

BLANK PAGE

© UCLES 2025

ஏதாவது மூன்று கேள்விகளுக்கு வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகளை எடுத்து விடைகள் எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.

பகுதி 1

1 பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.

(a) அகநானூறு

உண்ணாமையின் உயங்கிய மருங்கின்
ஆடாப் படிவத்து ஆன்றோர் போல,
வரை செறி சிறு நெறி நிரைபுடன் செல்லும்
கான யானை கவின் அழி குன்றம்
இறந்து, பொருள் தருதலும் ஆற்றாய்; சிறந்த
சில் ஐங்கூந்தல் நல் அகம் பொருந்தி
ஒழியின், வறுமை அஞ்சுதி; அழிதகவு
உடைமதி வாழிய, நெஞ்சே! நிலவு என
நெய்கனி நெடுவேல் எஃகிலை இமைக்கும்
மழை மருள் பல் தோல் மா வண் சோழர்
கழை மாய் காவிரிக் கடல் மண்டு பெருந்துறை,
இறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங் கடல் ஓதம் போல,
ஒன்றில் கொள்ளாய், சென்றுதரு பொருட்கே.

காரிக் கண்ணனார், பாடல் 123

(i) வரை, செறி, சிறு நெறி ஆகிய சொற்களின் பொருள் என்ன?

(ii) மேலே உள்ள பாடலில் பொருள் ஈட்டச் சென்ற தலைவன், பாதி வழியில் தலைவியின் நினைவு கடல் அலைபோல் போவதும் வருவதுமாக இருக்க தன் பிரிவுத் துயரத்தால் தன் நெஞ்சிற்குச் சொன்னது என்ன? [25]

© UCLES 2025

அல்லது

(b) சிலப்பதிகாரம்

"காதலனுட னன்றியே மாதவிதன் மனைபுக்காள்" என்று மிகுந்த சோகத்துடன் மாதவி வீடு திரும்பியதாக கானல் வரி பாடல் முடிய நேர்ந்த காரணம் என்ன? [25]

© UCLES 2025

2 திருக்குறள்

பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.

(a) உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது

எழுவாரை எல்லாம் பொறுத்து..

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்..

பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்

அலகுடை நீழ லவர்.

(i) மேலே சொல்லப்பட்டிருக்கும் மூன்று குறள்களில் வரும் ஆணி, பலகுடை, அலகுடை ஆகிய சொற்களின் பொருள் என்ன?

(ii) "உழவு" அதிகாரத்தில் நிலத்தில் உழுது பாடுபடும் உழவுத் தொழிலைப் பற்றி மேலே குறிக்கப்பட்டுள்ள குறள்களிலும், மேலும் அந்த அதிகாரத்தில் உள்ள மற்ற குறள்களிலும் திருவள்ளுவர் எவ்வாறு போற்றுகிறார் என்று விளக்குக. [25]

அல்லது

(b) "கொல்லாமை" என்னும் அதிகாரத்தில், உயிர்களைக் கொல்லுதலாகிய மிகக்கொடிய பாவத்தைச் செய்யாமல் வாழ்வது பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள் என்ன? [25]

3 தேவாரம் - திருஞான சம்பந்தர்

பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.

(a) இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோயெமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோயெமை ஆளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

(i) தன் தந்தைக்குக் கொடுப்பதற்குத் தம்மிடம் பொருள் ஒன்றும் இல்லாததை நினைந்து வருந்தி திருஞான சம்பந்தரால் பாடப்பட்ட இந்த தேவாரப் பதிகம் உணர்த்தும் பொருள் என்ன?

(ii) இறைவனை நோக்கி எனக்கு தேவைப்படுகின்ற பொருளை நீ தரவில்லையானால் அது எவ்விதத்தில் உன் திருவருளுக்கு அழகாகும் என்று வினவிய நயத்தினை விளக்குக. [25]

அல்லது

(b) மக்களின் வறுமையைப் போக்கி வளமான வாழ்வு வழங்குவதாக இப்பதிகம் கருதப்படுகிறது என்பதனை பாடலில் இருந்து மேற்கோள் காட்டி விளக்கவும். [25]

பகுதி 2

4 இக்காலக் கவிதைகள்

பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.

பாரதியார்

(a) “எக்கால மும்பெரு மகிழ்ச்சி யங்கே எவ்வகைக் கவலையும் போருமில்லை” என்று “கற்பனையூர்” என்ற பாடலில் அவ்வூரைப் பற்றி பாரதியார் கூறும் சிறப்புகள் என்ன? [25]

அல்லது

பாரதிதாசன்

(b) புது நாளினை எண்ணி உழைப்போம் என்ற பாடலில் உழவுத்தொழிலின் சிறப்புகளையும் உழவர்களின் உரிமைகளையும் பற்றி பாரதிதாசன் கூறும் விளக்கங்கள் என்னென்ன? [25]

5 கரிப்பு மணிகள் - நாவல்

பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு விடை எழுதவும்.

(a) உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கை போராட்டமும் அத்தொழிலால் அவர்கள் பட்ட அளவில்லாத் துன்பங்களைப் பற்றி கரிப்பு மணிகள் நாவல் எவ்வாறு விளக்குகிறது? [25]

அல்லது

(b) மனிதன் உயிர் வாழ இன்றியமையாத ஓர் பொருளான உப்பு, அதனை உற்பத்தி செய்ய உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்வில் விளைவிக்கும் இன்னல்களை கரிப்பு மணிகள் நாவல் எவ்வாறு படம் பிடித்து காட்டுகிறது? [25]

6 தமிழ் சிறுகதைகள்

பகுதி (a) அல்லது பகுதி (b) ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் 500 முதல் 600 சொற்களுக்குள் ஒரு கட்டுரை எழுதவும்.

(a) “குருபீடம்” கதையில் வரும் குரு மற்றும் சீடன், இந்த இருவரில் யார் கதையின் கதாநாயகன் என்று ஒரு கட்டுரை வரைக. [25]

அல்லது

(b) அந்த காலத்தில் பெண்களின் நிலைப்பாடு பற்றி “காட்டில் ஒரு மான்” சிறுகதையில் தங்கம் அத்தை கூறும் கதையின் வாயிலாக நீ என்ன உணருகிறாய்? [25]

© UCLES 2025

BLANK PAGE

© UCLES 2025

BLANK PAGE

BLANK PAGE

© UCLES 2025

BLANK PAGE

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.